பாண்டிப் பாசுரம்

இறைவன் கழலேத்தும்
இன்பம் இன்பமே

திருவருட் கழகம்
புதுவயல்

வெளியீடு எண் ௯.

பாண்டிப் பாசுரம்

என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ்ச் செய்யுமாறே.

(திருமூலர்)

திருவருட் கழகம்
புதுவயல்.

திருவருட் கழக நோக்கங்கள்

1 மக்களிடையே தெய்வ நம்பிக்கையும் பண்பும், அறிவும், வாழ்க்கையும் வளரும்படி பணிபுரிதல்.

2 கோவில்களில் கூட்டுப் பிரார்த்தனை சமய சொற்பொழிவு தமிழ் அர்ச்சனை செய்தல்.

" தமிழில் அர்ச்சனை செய்வதற்குத் தேவார திருவாசகங்களிலிருந்து தொகுத்தது, எங்கள் திருஅருட் கழக 4-வது வெளியீடு தெய்வத் தமிழ் மலர் "

3 பக்திப் பனுவல்களிலிருந்து பொறுக்கி எடுத்து சிறு பதிப்புக்களாக அடக்க விலையிலும் இலவசமாகவும் வெளி வரச் செய்தல்.

4 அறநிலையங்களைப் பேணல் பேணு மாறு முயற்சி செய்தல்.

5 செந்தமிழ்த் தெய்வப்புலவர்கள் திரு நாட்களைக் கொண்டாடச் செய்தல்.

6 நடராஜர் அபிடேகம் வருடத்தில் 6 முறையும் திருவம்பலச் சக்கரத் திற்கு அபிடேக ஆராதனை செய்து வழிபடுதல்

791

உ
சிவமயம்

நன்றி

"முன்னோர் மொழி பொருளையும் மொழியையும்
பொன்னே போல் போற்றுவோம்"

மலர்தலை யுலகில் மதிபெறு நூலோர் மதிப்புறு தனத்தர் கலைநிறை கவிஞர் ஏனைய யாவரும் போற்றும் புதுவயல் சிவநேசச்செல்வர், ப. வடு. பெரி. வீர. ராம. வீரப்ப செட்டியாரவர்கள் மகன் வாழிய. இராமசாமி செட்டியாரின் மகள் திருவளர் செல்வி உமையாளுக்கும் பள்ளத்தூர் திருநிறை செல்வன் ராம. அரு. அ. சிதம்பரத்திற்கும் துன்முகி ஆண்டு ஐப்பசித்திங்கள் இருபத்து நான்காம் நாள் திருமண விழாவில் சம்பந்தர் அப்பர் சுந்தரர் மூவராலும் பாடல் பெற்ற பாண்டி நாட்டு (கச) தலங்களின் தேவாரங்களுடன் அன்பர்கள் பயின்று வழிபாடு செய்து பயன்பெற வேண்டித் தொகுத்த பாண்டிப் பாசுரம் என்னும் இம்மலரை அன்பளிப்பாக வழங்கும் அவர்கட்கு எங்கள் உளங்கனிந்த நன்றி.

வாழ்க மணமக்கள்.

துன்முகி
ஐப்பசி உச
புதுவயல்.

அரு. உ. வீர. அழகப்ப செட்டியார்
செயலாளர்
திருவருட் கழகம்.

தமிழ்மறை நூல் நிலையம்

திருக்குறள்

சம்பந்தர் தேவாரம் திருமுறைகள்		1, 2, 3
நாவுக்கரசர் தேவாரம்	,,	4, 5, 6
சுந்தரர் தேவாரம்	,,	7
மாணிக்கவாசகர் திருவாசகம்	,,	8
திருவிசைப்பா திருப்பல்லாண்டு	,,	9
திருமந்திரம்	,,	10
திருவாலவாயுடையார் முதலிய பன்னிருவர் அருளியது	,,	11
பெரிய புராணம்	,,	12

திவ்யப்பிரபந்தம், கம்பராமாயணம், திருவிளையாடற் புராணம், தாயுமானவர் பாடல், திருவருட்பா முதலான இன்னும் அருள்பெற்ற நூல்களும் சைவ மக்களின் ஒவ்வொரு இல்லத்திலும் இருக்கவேண்டும்.



ப. வடு. பெரி. விர. விரப்ப செட்டியார்

முன்னுரை

எந்நாட்டவர்க்கும் இறைவனும் ஏறூர்ந்த செல்வன் தென்னாட்டையே தன் நாடாகக்கொண் டிருக்கிறான் என்று மேலோர் கூறுவர். காரணம் இறை சிவனுக்கு எண்ணற்ற கோவில்களைக் கொண்டு மிளிர்வது தென்னாடே என்பதை எவரே மறுக்க வல்லார்?

தென்னாட்டிலும் கண்ணுதல் பெருமான் கழகத் தமர்ந்து செந்தமிழ் வளர்த்த பெருமை பாண்டி நாட்டிற்கே உரிய தனிப் பெருமையாகும். அத்தகு பாண்டித் திருநாட்டில் மூவர் பாடல் பெற்ற தலங்களின் தொகை 14 ஆகும். சிவநெறி கடைப்பிடித் தொழுகுவோர் தேவராதி திருமுறைகளை ஓதிப் பயனடைய வேண்டியவர்கள். அதிலும் பாண்டிநாட்டுப் பதிகங்களையாவது ஓதி உயர்வடைய வேண்டும். அதுவும் முடியாத நிலையில்

இருக்கும் நிலைமையறிந்து 'பாண்டிப் பாசுரங்களில் சிலவற்றையாவது பயின்று அதன் சுவையில் ஈடுபடட்டும், அந்த ஈடு பாடே மக்கள் மனத்தைத் தெய்வப் பாசுரங்களில் ஈர்த்துச் சென்று நன் னெறி கூட்டும்' என்ற பெரு நோக் குடன் புதுவயல் திருவருட் கழகத்தார் "பாண்டிப் பாசுரம்" எனப் பெயரிய இம்மணிமலரை மிக்க பக்தி சிரத்தை யுடன் வெளியிட்டிருக்கிறார்கள்.

பாடல்கள், திரட்டிய முறையும் நோக்க மும் பெரிதும் பாராட்டத் தக்கது. தேவா ராதி திருமுறைகளுடன் திவ்யப் பிரபந்தம் திருவிளையாடல், தாயுமானர் திருப்பாசுரங்களையும், சேர்த்து அருமை யான பாடல்கள் எழுபத்தெட்டைத் தன் னகத்தே கொண்டு மிளிர்கிறது இது. பாடல்கள் அனைத்தும் தத்துவச் செறி வும், கவிதைச் சுவையும் நிறைந்து அழ கிய மலர், மணமும் பெற்றதென விளங்குகின்றன.

திருவருட்பேற்றை மக்கள் பெற்றுப் பயனடைய வேண்டும் என்ற ஒரே பெரு நோக்குடன் அயராது பணியாற்றும் புது

வயல் திருவருட் கழகத்தாரின் இப்பணி அருமையும் பெருமையும் கொண்டது. இவர்களின் நல்லெண்ணத்தில் அரும்பி நன்முயற்சியால் மலரும் இம்மலரை சிவ நேயச் செல்வர் ப. வடு. பெரி. வீர. ராம. வீரப்ப செட்டியாரவர்கள் பேர்த்தி திரு வளர் செல்வி **உமையாள்** திருமண நாளன்று அன்பர்கட்கெல்லாம் வழங்க முன்வந்தமை சாலச் சிறப்புடையதாகும்.

வெளியிட்டோரையும், வழங்குவோரையும் மனமாரப் பாராட்டி 'வாழ்க மணமக்கள்' என்று நாமும் வாழ்த்துரை வழங்குவோமாக!

துன்முகி
ஐப்பசி ௨௪

சா. கணேசன்.

சிவமயம்



பூழியர்கோன் வெப்பொழித்த
புகலியர்கோன் கழல்போற்றி.

ஆழிமிசைக் கல்மிதப்பில்
அணைந்தபிரான் அடிபோற்றி.

வாழிதிரு நாவலூர்
வன்தொண்டர் பதம்போற்றி.

ஊழிமலி திருவாத
வூரர் திருத் தாள்போற்றி.

உ

சிவமயம்

கைலாய விநாயகர்

ஆதிநடு அந்தமொடு அநாதிநீ சோதிநீ
அகிலபுவ னங்கள் நீயே

அரனொடரி அயனுநீ யிரவிமதி ஒளியுநீ
அட்டதிசை அமரர் நீயே

நீதிமறை நீஅந்த வேதமுடி வதுவுநீ
நீருநீ தீயு நீகால்

நீ,விண்ணு நீ,மண்ணு நீ,நாளு நீகோளு
நீகரண யோக நீயே.

தேதிநீ திங்கள்நீ திதியுநீ பதியுநீ
செப்பருந் தாய் தந்தைநீ

திகழும்உனை அல்லாமல் இகபரசுகந்தருந்
தெய்வமற் றில்லை யால்என்

காதில்உன் அரும்புகழ் கேட்கவும் விழியு
காணவும் புதுவயல் வாழ் [னைக்

காதல்மிகு கைலாய நாதநல்வி நாயகக்
கடவுளே அருள்புரி வையே.

— கைலாய விநாயகர் பதிகம்

வீரசேகரர்
வீரவனப் புராணம்

ஒளிகெழு பிழம்பே போற்றி
உமையவள் மணாள போற்றி
அளிகொளெண் குணத்தாய் போற்றி
அமைந்தவெட் டுருவாய் போற்றி
முளிதவிர் வீரை மூல
முளைத்தெழு சுடரே போற்றி
தெளிபவர்க் கினிக்கும் வீர
சேகரப் பிரானே போற்றி.

உமையம்மை

மருவள ரளகம் போற்றி
வளரொளி வதனம் போற்றி
உருவளர் அருட்கண் போற்றி
உவமையில் செவ்வாய் போற்றி
கருவளர் பவந்தீர் ஞானங்
கசிந்தெழு கொங்கை போற்றி
திருவளர் உமையே நின்பொற்
சேவடிக் கமலம் போற்றி

— மஹாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்

க. திரு ஆலவாய்

பாடியே மனம் நாடி வாழ்மினே.

அண்ணல் ஆலவாய்
நண்ணி னுன்தனை
எண்ணி யேதொழத்
திண்ணம் இன்பமே. க.

பூச இனியது நீறு
புண்ணிய மாவது நீறு

பேச இனியது நீறு
பெருந்தவத் தோர்களுக் கெல்லாம்

ஆசை கெடுப்பது நீறு
அந்தம தாவது நீறு

தேசம் புகழ்வது நீறு
திருஆல வாயான் திருநீறே. உ.

மானினேர்விழி மாதராய்வழு
திக்குமாபெருந் தேவிகேள்
பால்நல்வாயொரு பாலன்ஈங்கிவன்
என்றுநீபரி வெய்திடேல்
ஆனை மாமலை ஆதியாய
இடங்களிற்பல அல்லல்சேர்
ஈனர்கட்கெளி யேனலேன்திரு
ஆலவாயரன் நிற்கவே. ௩

செந்தெ ஞமுர லுந்திரு ஆலவாய்
மைந்த னேஎன்று வல்லமண் ஆசறச்
சந்த மார்தமிழ் கேட்டமெய்ஞ் ஞானசம்
பந்தன் சொற்பக ரும்பழி நீங்கவே. ௪

அப்பன் ஆலவாய் ஆதி அருளினல்
வெப்பந்தென்னவன் மேலுறமேதினிக்கு
ஒப்ப ஞானசம் பந்தன் உரைபத்தும்
செப்ப வல்லவர் தீதிலாச் செல்வரே. ௫

குற்றம்நீ குணங்கள்நீ
  கூடல்ஆல வாயிலாய்
சுற்றம்நீ பிரானும்நீ
  தொடர்ந்திலங்கு சோதிநீ
கற்றநூற் கருத்தும்நீ
  அருத்தமின்பம் என்றிவை
முற்றும்நீ புகழ்ந்துமுன்
  உரைப்பதென்மு கம்மனே சா

அந்த ணாளர் புரியும் அருமறை
சிந்தை செய்யா அருகர் திறங்களைச்
சிந்த வாதுசெ யத்திரு வுள்ளமே
வெந்த நீறு அணியும் விகிர்தனே.
ஞாலம் நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆல வாயில் உறையும்எம் ஆதியே. எ

ஆலநீழல் உகந்த திருக்கையே
  ஆனபாடல் உகந்த திருக்கையே
பாலின்நேர்மொழி யாளொரு பங்கனே
  பாதமோதலர் சேர்புர பங்கனே
கோலநீறணி மேதகு பூதனே
  கோதிலார்மனம் மேவிய பூதனே
ஆலநஞ்சமு துண்டக ளத்தனே
  ஆலவாயுறை அண்டர்கள் அத்தனே.

கணங்களாய் வரினும் தமியராய் வரினும்
அடியவர் தங்களைக் கண்டால்

குணங்கொடு பணியும் குலச்சிறை குலா
கோபுரம் சூழ்மணிக் கோயில் [வும்

மணங்கமழ் கொன்றை வாளரா மதியம்
வன்னிவண் கூவிள மாலை

அணங்கு வீற்றிருந்த சடைமுடி அண்
ஆலவாய் ஆவதும் இதுவே. ௬ [ணல்

—சம்பந்தர்.

வேதியா வேத கீதா
விண்ணவர் அண்ணா என்றென்று

ஓதியே மலர்கள் தூவி
ஒருங்கிநின் கழல்கள் காணப்

பாதியோர் பெண்ணை வைத்தாய்
படர்சடை மதியம் சூடும்

ஆதியே ஆல வாயில்
அப்பனே அருள்செ யாயே. ம

வாயானை மனத்தானை மனத்துள் நின்ற
கருத்தானைக் கருத்தறிந்து முடிப்பான் [தன்னை
தூயானைத் தூவெள்ளை ஏற்றான் தன்னைச்
சுடர்த்திங்கட் சடையானைத் [தொடர்ந்து நின்றென்
தாயானைத் தவமாய தன்மை யானைத்
தலையாய தேவாதி தேவர்க்கு என்றும்
சேயானைத் தென்கூடல் திரு ஆலவாய்ச்
சிவனடியே சிந்திக்கப் பெற்றேன்
நானே. ௰௧

—அப்பர்.

உ. திருஆப்பனூர்
எண்ணில் வினைகளைவான்

கண்ணன் கடிக்கமல
மலர்மே லினிதுறையும்
அண்ணற் களப்பரி தாய்
நின்றங் கடியார்மேல்
எண்ணில் வினை களைவான்
எழிலாப்ப னூரானைப்
பண்ணின் இசை பகர்வார்
வினைபற் றறுப்பாரே. ௰௨

௩. திருப்பரங்குன்றம்
தேன்மொழிபங்கன்

நீரிடங்கொண்ட நிமிர்சடைதன்மேல்
நிரைகொன்றை
சீரிடங்கொண்ட எம்இறைபோலும்
சேய்தாய
ஓருடம்புள்ளே உமையொருபாகம்
உடனாகிப்
பாரிடம்பாட இனிதுறைகோயில்
பரங்குன்றே. ௰௩

— சம்பந்தர்.

அடிகேள் உமக்காட் செயஅஞ் சுதும்என்று
அமரர்பெருமா னைஆரூரன் அஞ்சி
முடியால் உலகாண்ட மூவேந்தர்முன்னே
மொழிந்து
ஆறுமோர் நான்கும் ஒரொன் றினையும்
படியா இவைகற் றுவல்ல அடியார்
பரங்குன்றம்மேய பரமன் அடிக்கே
குடியா கிவானோர்க்கும் ஓர்கோவும் ஆகிக்
குலவேந்தராய்விண் முழுதாள் பவரே. ௰௪

— சுந்தரர்

௪. திருஏடகம்
ஏடுசென்று அணைதரும் ஏடகத்தான்

ஏலமார் தருகுழல் ஏழையோ
டெழில்பெறும்
கோலமார் தருவிடைக் குழகனூர்
உறைவிடம்
சாலமா தவிகளும் சந்தனம்
சண்பகம்
சீலமார் ஏடகம் சேர்தலாம்
செல்வமே. ௰௫

௫. திருக்கொடுங்குன்றம்
(பிரான்மலை)
தொழுவார்கட்கு அருள் செய்யும் பெம்மான்

கைம்மாமத கரியின்இனம்
இடியின்குரல் அதிரக்
கொய்ம்மாமலர்ச் சோலைபுக
மண்டும்கொடுங் குன்றம்
அம்மானென உள்கித்தொழு
வார்கட்கருள் செய்யும்
பெம்மானவன் இமையோர்தொழ
மேவும்பெரு நகரே. ௰௬

சூ. திருப்புத்தூர்
திங்கள் தவழ்புன் சடையார்

பாங்கு நல்ல வரிவண்டு இசைபாடத்
தேங்கொள் கொன்றைதிளைக்கும்திருப்புத்தூர்
ஓங்கு கோயில் உறைவார் அவர்போலும்
தாங்கு திங்கள் தவழ்புன் சடையாரே.மஎ
—சம்பந்தர்

மின்காட்டுங் கொடிமருங்குல்
உமையாட்கு என்றும்
விருப்பவன்காண் பொருப்புவலிச்
சிலைக்கை யோன்காண்
நன்பாட்டுப் புலவனாய்ச்
சங்கம் ஏறி
நற்கனகக் கிழிதருமிக்கு
அருளினோன்காண்
பொன்காட்டக் கடிக்கொன்றை
மருங்கே நின்ற
புனக்காந்தள் கைகாட்டக்
கண்டு வண்டு
தென்காட்டும் செழும்புறவில்
திருப்புத் தூரில்
திருத்தளியான் காண்அவனென்
சிந்தை யானே. — அப்பர் கஅ.

எ. திருப்புனவாயில்

நான்மறை பாடிய நம்பன்

மின்னியல் செஞ்சடை வெண்பிறை
யன்விரி நூலினன்
பன்னிய நான்மறை பாடியா
டிப்பல வூர்கள்போய்
அன்னம்அன் னந்நடை யாளொ
டும்அம ரும்இடம்
புன்னை நன் மாமலர் பொன்னுதிர்க்
கும்புன வாயிலே. கக

— சம்பந்தர்

ஏசற்று நீநினை என்னெடு
சூளறும் வைகலும்
பாசற் றவர்பாடி நின்று
டும்ப ழம்பதி
தேசத் தடியவர் வந்திரு
போதும் வணங்கிடப்
பூசற் றுடி பூசல்
அருப்புன வாயிலே. உ0

—சுந்தரர்

அ. திருவிராமேச்சுரம்
பாதமேத்தத் துயர்நீங்குமே

அணையலை சூழ்கடல் அன்றடைத்
துவழி செய்தவன்
பணையிலங் கும்முடி பத்திறுத்
தபழி போக்கிய
இணையிலி என்றும் இருந்தகோ
யில்இரா மேச்சுரம்
துணையிலி தூமலர்ப் பாதம்ஏத்
தத்துயர் நீங்குமே. உக

அலைவளர் தண்புனல் வார்சடைமேல்
அடக்கி ஒருபாகம்
மலைவளர் காதலி பாடஆடி
மயக்கா வருமாட்சி
இலைவளர் தாழை முகிழ்விரியும்
இராமேச் சுரம்மேயார்
தலைவளர் கோலநன் மாலைசூடும்
தலைவர் செயுஞ்செயலே. உஉ

—சம்பந்தர்

நாடிவாழ் நெஞ்சமே நீ.

கோடிமா தவங்கள் செய்து
குன்றினர் தம்மைஎல்லாம்

வீடவே சக்கரத்தால் எறிந்துபின்
அன்புகொண்டு

தேடிமால் செய்த கோயில் திருஇரா
மேச்சுரத்தை

நாடிவாழ் நெஞ்சமே நீ நன்னெறி
ஆகும் அன்றே. உ௩

— அப்பர்

௪. திருவாடானை
ஈசனை ஏத்தத் தீவினை தீருமே

மறைவல்லாரொடு வானவர்தொழுது
அறையுந்தண்புனல் ஆடானை
உறையுமீசனை ஏத்தத்தீவினை
பறையும்நல்வினை பற்றுமே. உ௪

ய. திருக்கானப்பேர்
தண் தமிழால் உருகிப்பரவுக

பிடியெலாம் பின்செலப்
 பெருங்கைமா மலர்தழீஇ
விடியலே தடமூழ்கி
 விதியினல் வழிபடும்
கடியுலாம் பூம்பொழில்
 கானப்பேர் அண்ணல்நின்
அடியலால் அடைசரண்
 உடையரோ அடியரே. உரு

— சம்பந்தர்

கன்னலை இன்னமுதைக்
 கார்வயல் சூழ்கானப்
பேருறை காளையைஒண்
 சீருறை தண்தமிழால்
உன்னி மனத்தயரா
 உள்ளுரு கிப்பரவும்
ஒண்பொழில் நாவலர்கோன்
 ஆகிய ஆரூரன்

பன்னும் இசைக்கிளவி
பத்திவை பாடவல்லார்
பத்தர் குணத்தினராய்
எத்திசை யும்புகழ
மன்னி இருப்பவர்கள்
வானில் இழிந்திடினும்
மண்டல நாயகராய்
வாழ்வது நிச்சயமே. உசு

—சுந்தரர்.

௰க. திருப்பூவணம்
பொழில் திகழும் புனிதனுர்

கூரார்வாளி சிலையிற்கோத்துக்
கொடிமதில் கூட்டழித்த
போரார்வில்லி மெல்லியலாளோர்
பால் மகிழ்ந்தானிடமாம்
ஆராஅன்பில் தென்னர்சேரர்
சோழர்கள் போற்றிசைப்பத்
தேரார்வீதி மாடம்நீடுந்
தென்திருப் பூவணமே. உஎ

புண்ணியர் தொழுதெழு
பூவ ணத்துறை
அண்ணலை அடிதொழுது
அந்தண் காழியுள்
நண்ணிய அருமறை
ஞானசம் பந்தன்
பண்ணிய தமிழ்சொலப்
பறையும் பாவமே. —சம்பந்தர். உஅ

படைமலிந்த மழுவாளும்
மானுந் தோன்றும்
பன்னிரண்டு கண்ணுடைய
பிள்ளை தோன்றும்
நடைமலிந்த விடையோடு
கொடியுந் தோன்றும்
நான்மறையின் ஒலிதோன்றும்
நயனந் தோன்றும்
உடைமலிந்த கோவணமுங்
கீளுந் தோன்றும்
ஊரல்வெண் சிரமாலை
உலாவித் தோன்றும்
புடைமலிந்த பூதத்தின்
பொலிவு தோன்றும்
பொழில்திகழும் பூவணத்தெம்
புனித னார்க்கே. —அப்பர். உகூ

மின்னனை யாள்திரு மேனி விளங்கவோர்
தன்னமர் பாகம தாகிய சங்கரன்
முன்நினை யார்புரம் மூன்றெரி ஊட்டிய
பொன்னனை யான்உறை பூவணம்

ஈதோ, ௩௰

௰௨. திருச்சுழியல்
அடிதொழுவார் அரசாகுவர்

கவ்வைக்கடல் கதறிக்கொணர்
முத்தங்கரைக் கேற்றக்

கொவ்வைத்துவர் வாயார்குடைந்து
ஆடுந்திருச் சுழியல்

தெய்வத்தினை வழிபாடுசெய்து
எழுவார்அடி தொழுவார்

அவ்வத்திசைக்கு அரசாகுவர்
அலராள் பிரியாளே. ௩௧

—சுந்தரர்.

௰௩. திருக்குற்றாலம்
நம்பான்மேய நன்னகர்

வம்பார்குன்றம் நீடுயர்சாரல்
வளர்வேங்கைக்
கொம்பார்சோலைக் கோலவண்டியாழ்செய்
குற்றாலம்
அம்பால்நெய்யோடு ஆடல்அமர்ந்தான்
அலர்கொன்றை
நம்பான்மேய நன்னகர்போலும்
நமரங்காள் ௩௨

திருந்த மதிசூடித் தெண்ணீர்
சடைக்கரந்து தேவிபாகம்
பொருந்திப் பொருந்தாத வேடத்தாற்
காடுறைதல் புரிந்தசெல்வர்
இருந்த இடம்வினவில் ஏலங்கமழ்
சோலையின வண்டுயாழ்செய்
குருந்த மணநாறுங் குன்றிடஞ்சூழ்
தண்சாரற் குறும்பலாவே. ௩௩

௰௪. திருநெல்வேலி
நாதன் நாமமே சிந்தைசெய்

மருந்தவை மந்திரம் மறுமைநன்
னெறியவை மற்றுமெல்லாம்

அருந்துயர் கெடுமவர் நாமமே
சிந்தைசெய் நன்னெஞ்சமே

பொருந்துதண் புறவினிற் கொன்றை
பொன் சொரிதரத்துன்று பைம்பூம்

செருந்திசெம் பொன்மலர் திருநெல்வே
லியுறை செல்வர் தாமே. ௫௪

—சம்பந்தர்.

திருவாசகம்
திரு அம்மானை

பண்சுமந்த பாடல்
பரிசு படைத்தருளும்
பெண்சுமந்த பாகத்தன்
பெம்மான் பெருந்துறையான்
விண்சுமந்த கீர்த்தி
வியன்மண்ட லத்தீசன்
கண்சுமந்த நெற்றிக்
கடவுள் கலிமதுரை

மண்சுமந்து கூலிகொண்டு
அக்கோவால் மொத்துண்டு

புண்சுமந்த பொன்மேனி
பாடுதுங்காண் அம்மானாய் ௧௫

விண்ணாளுந் தேவர்க்கும்
மேலாய வேதியனை

மண்ணாளும் மன்னவர்க்கும்
மாண்பாகி நின்றானை

தண்ணார் தமிழ்அளிக்கும்
தண்பாண்டி நாட்டானைப்

பெண்ணாளும் பாகனைப்
பேணு பெருந்துறையில்

கண்ணார் கழல்காட்டி
நாயேனை ஆட்கொண்ட

அண்ணா மலையானைப்
பாடுதுங்காண் அம்மானாய். ௧௬

செப்பார் முலைபங்கன்
தென்னன் பெருந்துறையான்
தப்பாமே தாளடைந்தார்
நெஞ்சுருக்குந் தன்மையினான்
அப்பாண்டி நாட்டைச்
சிவலோகம் ஆக்குவித்த
அப்பார் சடையப்பன்
ஆனந்த வார்கழலே
ஒப்பாக ஒப்புவித்த
உள்ளத்தார் உள்ளிருக்கும்
அப்பாலைக்கு அப்பாலைப்
பாடுதுங்காண் அம்மானாய். ௧௭

முன்னானை மூவர்க்கும்
முற்றுமாய் முற்றுக்கும்
பின்னானைப் பிஞ்ஞகனைப்
பேணு பெருந்துறையில்
மன்னானை வானவனை
மாதியலும் பாதியனைத்
தென்னானைக் காவானைத்
தென்பாண்டி நாட்டானை
என்னானை என்னப்பன்
என்பார்கட்கு இன்னமுதை
அன்னானை அம்மானைப்
பாடுதுங்காண் அம்மானாய். ௧௮

திருப்பூவல்லி

திண்போர் விடையான்
 சிவபுரத்தார் போரேறு
மண்பால் மதுரையில்
 பிட்டமுது செய்தருளித்
தண்டாலே பாண்டியன்
 தன்னைப் பணிகொண்ட
புண்பாடல் பாடிநாம்
 பூவல்லி கொய்யாமோ. ௩௬

திருப்பொன்னூசல்

நஞ்சமர் கண்டத்தன்
 அண்டத் தவர்நாதன்
மஞ்சுதோய் மாடமணி
 உத்தர கோசமங்கை
அஞ்சொலாள் தன்னோடும்
 கூடி அடியவர்கள்
நெஞ்சுளே நின்றமுதம்
 ஊறிக் கருணைசெய்து
துஞ்சல் பிறப்பறுப்பான்
 தூய புகழ்பாடிப்
புஞ்சமார் வெள்வளையீர்
 பொன்னூசல் ஆடாமோ. ௩௭

அன்னைப் பத்து

நீண்ட கரத்தர் நெறிதரு குஞ்சியர்
பாண்டிநன் னாடரால் அன்னே என்னும்
பாண்டிநன் னாடர் பரந்தெழு சிந்தையை
ஆண்டன்பு செய்வரால் அன்னே
என்னும். சக

குயிற்பத்து

ஏர்தரும் ஏழுலகு ஏத்த
எவ்வுரு வுந்தன் னுருவாய்
ஆர்கலி சூழ்தென் இலங்கை
அழகமர் வண்டோ தரிக்குப்
பேரருள் இன்பம் அளித்த
பெருந்துறை மேய பிரானைச்
சீரிய வாயால் குயிலே
தென்பாண்டி நாடனைக் கூவாய், சஉ

திருத்தசாங்கம்

ஏதம்இலா இன்சொல்
மரகதமே ஏழ்பொழிற்கும்
நாதன்நமை ஆளுடையான்
நாடுரையாய்—காதலவர்க்கு
அன்பாண்டு மீளா
அருள்புரிவான் நாடென்றும்
தென் பாண்டி
நாடே தெளி. சஙு

தாதாடு பூஞ்சோலைத்
தத்தாய் நமையாளும்
மாதாடும் பாகத்தன்
வாழ்பதியென்—கோதாட்டி
பத்தரெல்லாம் பார்மேல்
சிவபுரம்போல் கொண்டாடும்
உத்தர கோசமங்கை ஊர். ௪௪

திருப்பள்ளியெழுச்சி

அதுபழச் சுவையென
அமுதென அறிதற்கு
அரிதென எளிதென
அமரரும் அறியார்
இதுஅவன் திருவுரு
இவனவன் எனவே
எங்களை ஆண்டுகொண்டு
இங்கெழுந்து அருளும்
மதுவளர் பொழில்திரு
வுத்தர கோச
மங்கையுள் ளாய்திருப்
பெருந்துறை மன்னா
எதுஎமைப் பணிகொளும்
ஆறது கேட்போம்
எம்பெரு மான்பள்ளி
எழுந்தரு ளாயே. ௪௫

திருப்பாண்டிபதிகம்

காலம்உண் டாகவே காதல்செய்து
உய்மின் கருதரிய

ஞாலம்உண் டானொடு நான்முகன்
வானவர் நண்ணரிய

ஆலம்உண் டான்எங்கள் பாண்டிப்
பிரான்தன் அடியவர்க்கு

மூலபண் டாரம் வழங்குகின்
ருன்வந்து முந்துமினே. ௬௬

திருவார்த்தை.

அங்கணன் எங்கள் அமரர்பெம்மான்
அடியார்க்கு அமுதன் அவனிவந்த

எங்கள் பிரான்இரும் பாசந்தீர
இகபர மாயதோர் இன்பமெய்தச்

சங்கங் கவர்ந்துவண் சாத்திேடும்
சதுரன் பெருந்துறை யாளிஅன்று

மங்கையார் மல்கு மதுரைசேர்ந்த
வகையறி வாரெம் பிரானுவாரே. ௬௭

திருக்கோவையார்

சிறைவான் புனற்றில்லைச்
சிற்றம்பலத்தும் என்சிந்தையுள்ளும்
உறைவான் உயர்மதிற்
கூடலினுய்ந்த ஒண்தீந்தமிழின்
துறைவாய் நுழைந்தனையோ
அன்றியேழிசைச் சூழல்புக்கோ
இறைவா தடவரைத்தோட்கு
என்கொலாம் புகுந்தெய்தியதே. ௪௮

—மாணிக்கவாசகர்.

திருவிசைப்பா : திருப்பூவணம்:

திருவருள் புரிந்தா ளாண்டுகொண்டு இங்ஙன்
சிறியனுக்கு இனியது காட்டிப்
பெரிதருள் புரிந்து ஆனந்தமே தருநின்
பெருமையிற் பெரியதொன்று உளதே
மருதர சிருங்கோங்கு அகில்மரஞ் சாடி
வரைவளங் கவர்ந்திழி வைகைப்
பொருதிரை மருங்கோங் காவண வீதிப்
பூவணம் கோயில்கொண் டாயே. ௪௯

—கருவூர்த் தேவர்.

திருமுகப் பாசுரம்

மதிமலி புரிசை மாடக் கூடல்
பதிமிசை நிலவும் பால்நிற வரிச்சிறகு
அன்னம் பயில்பொழில் ஆல வாயின்
மன்னிய சிவன்யான் மொழிதரு மாற்றம்
பருவக் கொண்மூப் படியெனப் பாவலர்க்கு
உரிமையின் உரிமையின் உதவி ஒளிதிகழ்
குருமா மதிபுரை குலவிய குடைக்கீழ்ச்
செருமா வுகைக்கும் சேரலன் காண்க
பண்பா லியாழ்பயில் பாணபத் திரன்
தன்போல் என்பால் அன்பன் தன்பால்
காண்பது கருதிப் போந்தனன்
மாண்பொருள் கொடுத்து வரவிடுப் பதுவே.

—திருவாலவாயுடையார்

தரணியில் பொய்மையிலாத்
தமிழ்ச்சங்க மதில்கபிலர்
பரணர் நக்கீரர் முதல்
நாற்பத் தொன்பது பல்புலவோர்
அருள் நமக்கீயும் திரு ஆலவாய்
அரன் சேவடிக்கே
பொருள் அமைத்து இன்பக்கவி
பலபாடும் புலவர்களே. ௫க

நம்பியாண்டார் நம்பி

பெரிய புராணம்

நாவுக்கரசர் வருகை

ஆண்டஅரசு அங்கணர்சீர்
அருள்பெற்றப் பதிநின்றும்
பாண்டிநாட்டு எழுந்தருளும்
பான்மையராய்த் தென்திசைபோய்க்
காண்தகைய திருப்புத்தூர்
பணிந்தேத்திக் கதிர்மதியம்
தீண்டுகொடி மதில்மதுரைத்
திருஆல வாய்சேர்ந்தார். ருஉ

சென்றணைந்து மதுரையினில்
திருந்திய நூல் சங்கத்துள்
அன்றிருந்து தமிழ்ஆராய்ந்து
அருளியஅங் கணர்கோயில்
முன்றிலினை வலங்கொண்டு
முன்னிறைஞ்சி உள்புக்கு
வண்தனிமால் விடையானை
வணங்கிமகிழ் வொடுந்திளைத்தார். ருங

திருவால வாய்அமர்ந்த
செஞ்சுடரைச் செழும்பொருள் நூல்
தருவானை நேரிசையுந்
தாண்டக முதலான
பெருவாய்மைத் தமிழ்பாடிப்
பேணுதிருப் பணிசெய்து
மருவார்முப் புரம்எரித்தார்.
பூவணத்தை வந்தடைந்தார். ருச

ஞானசம்பந்தர் வருகை.

கொடுங்குன்றத்து இனிதமர்ந்த
கொழும்பவளச் செங்குன்றை
அடுங்குன்றம் உரித்தாரை
வணங்கிஅருந் தமிழ்பாடி
நெடுங்குன்றும் படர்கானு
நிறைகாடுங் கடந்துமதி
தொடுங்குன்ற மதின்மதுரைத்
தொல்நகர்வந்து அணைகின்ருர்.ருரு

தொண்டர்தாம்போற்றிக்காட்டிடக்கண்டு
துணைமலர்க் கரங்குவித்து அருளி
மண்டுபேர்அன்பால்மண்மிசைப்பணிந்து
மங்கையர்க் கரசியென்று எடுத்தே

எண்டிசை பரவும் ஆலவாயாவது
இதுவேஎன்று இருவர்தம் பணியும்
கொண்டமை சிறப்பித் தருளிநற்
பதிகம் பாடினர்குவலயம் போற்ற. ருசு

நீல மாமிடற்று ஆலவா
யானென நிலவும்
மூல மாகிய திருவிருக்
குக்குறள் மொழிந்து
சீல மாதவத் திருத்தொண்டர்
தம்மொடுந் திளைத்தார்
சாலு மேன்மையில் தலைச்சங்கப்
புலவனார் தம்முன் ருஎ

ஆலமே அமுதமாக
வுண்டுவா னவர்க்களித்துக்

காலனை மார்க்கண்டற்காக்
காய்ந்தனை அடியேற்கின்று

ஞாலநின் புகழேயாக
வேண்டும்நான் மறைகளேத்தும்

சீலமே ஆலவாயில் சிவபெரு
மானே என்றார். ருஅ

சுந்தரர் வருகை

சேரமான் தோழரும்அச்
சேரர்பிரானும்பணிப்பூண்
ஆரமார் பரைமதுரை
ஆலவா யினில் வணங்க
வாரமா வந்தணைய
வழுதியார் மனக்காதல்
கூரமா நகர்கோடித்து
எதிர்கொண்டு கொடுபுக்கார். ௫௯

திருவால வாயமர்ந்த
செஞ்சடையார் கோயில்வலம்
வருவார்முன் வீழ்ந்திறைஞ்சி
வன்தொண்டர் வழித்தொண்டு
தருவாரைப் போற்றிசைத்துத்
தாழ்ந்தெழுந்து வாழ்ந்ததமிழ்ப்
பெருவாய்மை மலர்புனைந்து
பெருமகிழ்ச்சி பிறங்கினர். ௬௰

மங்கையர்க்கரசியார்

மங்கையர்க்குத் தனிஅரசி
எங்கள் தெய்வம்
வளவர்திருக் குலக்கொழுந்து
வளைக்கை மானி

செங்கமலத் திருமடந்தை
கன்னி நாடாள்
தென்னர்குலப் பழிதீர்த்த
தெய்வப் பாவை
எங்கள்பிரான் சண்பையர்கோன்
அருளி னலே
இருந்தமிழ்நா டுற்றஇடர்
நீக்கித் தங்கள்
பொங்கொளிவெண் திருநீறு
பரப்பி னரைப்
போற்றுவார் கழல்எம்மால்
போற்ற லாமே. சூக

திருச்சிற்றம்பலம்—சேக்கிழார்.

நாலாயிரப் பிரபந்தம்

திருப்பல்லாண்டு

பல்லாண்டென்று பவித்திரனைப்
பரமேட்டியை சார்ங்கமென்னும்
வில்லாண்டான்தன்னை வில்லிபுத்தூர்
விட்டுசித்தன் விரும்பியசொல்
நல்லாண்டென்று நவின்றுரைப்பார்
நமோ நாராயணாஎன்று
பல்லாண்டும் பரமாத்மனைச்
சூழ்ந்திருந்தேத்துவர் பல்லாண்டே.

வண்ணமாடங்கள்

வண்ணமாடங்கள்சூழ் திருக்கோட்டியூர்
கண்ணன்கேசவன் நம்பிபிறந்தினில்
எண்ணெய்சுண்ணம் எதிரெதிர் தூவி
கண்ணன்முற்றம் கலந்து அளறாயிற்றே
— பெரியாழ்வார்.

திருப்பாவை

வங்கக்கடல்கடைந்த
மாதவனைக்கேசவனைத்

திங்கள் திருமுகத்துச்
சேயிழையார்சென்றிறைஞ்சி

அங்கப்பறைகொண்டவாற்றை
அணிபுதுவைப்

பைங்கமலத்தண்தெரியல்
பட்டர்பிரான்கோதைசொன்ன

சங்கத்தமிழ்மாலை
முப்பதும்தப்பாமே.

இங்குஇப்பரிசுரைப்பார்
ஈரிரண்டுமால்வரைத்தோள்

செங்கண் திருமுகத்துச்
செல்வத்திருமாலால்

எங்கும்திருவருள்பெற்று
இன்புறுவர்எம்பாவாய் ௬௪

—ஆண்டாள்

திருமாலிருஞ்சோலை

நாறுநறும்பொழில் மாலிருஞ்சோலை
நம்பிக்கு நான்

நூறுதடாவில் வெண்ணெய்
வாய்நேர்ந்துபராவி வைத்தேன்

நூறுதடா நிறைந்த அக்காரவடிசில்
சொன்னேன்

ஏறுதிருவுடையான் இன்றுவந்து
இவை கொள்ளுங்கொலோ. ௬௫

—நாச்சியார் திருமொழி

கிளரொளியிளமை கெடுதவன்முன்னம்
வளரொளிமாயோன் மருவியகோயில்
வளரிளம்பொழில்சூழ் மாலிருஞ்சோலை
தளவிலராகில் சார்வதுசதிரே. ௬௬

கூத்தன்கோவலன்
குதற்றுவல்லசுரர்கள்சுற்றம்
ஏத்தும்நங்கட்கும் அமரர்க்கும்
முனிவர்க்கும்இன்பன்
வாய்த்ததண்பணை வளவயல்சூழ்
திருமோகூர்
ஆத்தன்தாமரையடியன்றி
மற்றிலம் அரணே. சூஎ
—நம்மாழ்வார்

உருகிநெஞ்சே நினைந்துஇங்கு
இருந்தென் தொழுதும்எழு
முருகுவண்டுண் மலர்க்கைதையின்
நீழலில்முன்னொருநாள்
பெருகுகாதன்மை என்னுள்ளமெய்தப்
பிரிந்தானிடம்
பொருதுமுந்நீர்க்கரைக்கே
மணியுந்துபுல்லாணியே சூஅ

வல்லிச்சிறு நுண்ணிடை
யாரிடை நீர்வைக்கின்ற
அல்லல் சிந்தைதவிர
அடைமின் அடியீர்காள்

சொல்லில் திருவே அனையார்
கனவாயெயிறுப்பான்
கொல்லைமுல்லை மெல்லரும்
பீனும் குறுங்குடியே ௬௯

வில்லால் இலங்கை
மலங்கச் சரம்துரந்த
வல்லாளன் பின்போன
நெஞ்சம் வருமளவும்
எல்லாரும் என்தன்னை
ஏசிலும் பேசிடினும்
புல்லாணி எம்பெருமான்
பொய்கேட்டு இருந்தேனே. ௭௰

முந்துறவுரைக்கேன்விரைக் குழல்மடவார்
கலவியைவிடு தடுமாறல்
அந்தரமேழும் அலைகடலேழும்
ஆய எம்மடிகள் தம்கோயில்
சந்தொடுமணியும் அணிமயில் தழையும்
தழுவிவந்து அருவிகள்நிரந்து
வந்திழிசாரல் மாலிருஞ்சோலை
வணங்குதும்வா மடநெஞ்சே. ௭௧

பெண்ணாகி இன்னமுதம்
வஞ்சித்தானைப்

பிறையெயிற்று அன்றடலரியாய்ப்
பெருகினனை
தண்ணார்ந்த வார்புனல்சூழ் மெய்யம்
என்னும்
தடவரைமேல் கிடந்தானை
பணங்கள்மேவி
எண்ணானை எண்ணிறந்த
புகழினனை
இலங்கொளிசேர் அரவிந்தம்
போன்றுநீண்ட
கண்ணானை கண்ணாரக்கண்டு
கொண்டேன்
கடிபொழில் சூழ்கடல்
மல்லைத்தலசயனத்தே. ௭௨

கட்டேறு நீள்சோலைக்
காண்டவத்தைத் தீமூட்டி
விட்டானை மெய்யம்
அமர்ந்த பெருமானை
மட்டேறு கற்பகத்தை மாதர்க்காய்
வண்துவரை
நட்டானைநாடி நறையூரில்
கண்டேனே. ௭௩

முளைக்கதிரைக் குறுங்குடியுள்
முகிலை மூவா

மூவுலகும் கடந்து அப்பால்
முதலாய் நின்ற

அளப்பரிய ஆரமுதை
அரங்கம் மேய

அந்தணனை அந்தணர்தம்
சிந்தையானை

விளக்கொளியை மரகதத்தை
திருத்தண்காவில்

வெஃகாவில் திருமாலைப்
பாடக்கேட்டு

வளர்த்ததனல் பயன்பெற்றேன்
வருகஎன்று

மடக்கிளியைக் கைகூப்பி
வணங்கினளே. ௭௪

—திருமங்கை ஆழ்வார்

திருவிளையாடற் புராணம்

சடைமறைத்துக்கதிர்மகுடம்தரித்துநறுங்
கொன்றையந்தார் தணந்து வேப்பந்

தொடைமுடித்து விடநரகக்
கலன்அகற்றி மாணிக்கச் சுடர்பூணேந்தி
விடைநிறுத்திக் கயலெடுத்து வழுதி
மருமகளுகி மீன நோக்கின்
மடவரலை மணந்துலகமுழுதாண்ட
சுந்தரனை வணக்கம் செய்வாம். எ௫

பாயுடையார் விடுத்தபழி அழல்வழுதி
உடல் குளிப்பப் பதிகமோதும்
சேயுடையா ரணம்திளேக்கும் செவிவுடை
அளவிறந்த திசைகள் எட்டும் [யார்
தோயுடையார் பொன்னிதழித் தொடை
விடஅரவம் சுற்றும் ஆல [யுடையார்
வாயுடையார் புகழ்பாடப் பெறுவேமேல்
வேண்டுவதிம் மனிதயாக்கை. எசு

செழியர்பிரான் திருமகளாய்க் கலைபயின்று
முடிபுனைந்து செங்கோலோச்சி
முழுதுலகும் சயங்கொண்டு திறைகொண்
நந்திகண முனைப்போர்சாய்த்துத் [டு
தொழுகணவற்கு அணிமணமாலிகைசூட்
தன்மகுடம் சூட்டிச்செல்வம் [டித்
தழைவுறுதன் அரசளித்த பெண்ணரசி
அடிக்கமலம் தலைமேல் வைப்பாம். எஎ

—பரஞ்சோதி முனிவர்.

மலைவளர் காதலி

பதியுண்டு நிதியுண்டு, புத்திரர்கள்
மித்திரர்கள், பக்கமுண்டெக்காலமும்
பவுசுண்டுதவிசுண்டு, திட்டாந்தமாக,யம
படரெனுந் திமிரமணுகாக்
கதியுண்டுஞானமாங், கதிருண்டு
சதிருண்டு, காயசித்தி களுமுண்டு
கறையுண்டகண்டர்பால், அம்மைநின்
தாளிற், கருத்தொன்று முண்டாகுமேல்
நதியுண்ட கடலெனச், சமயத்தை
யுண்டபரஞான ஆனந்தவொளியே!
நாதாந்த ரூபமே! வேதாந்தமோனமே;
நானெனும் அகந்தைதீர்த்தென்
மதியுண்டமதியான மதிவதனவல்லியே!
மதுசூதனன் தங்கையே!
வரைராஜனுக்கிருகண் மணியாயுதித்தமலை
வளர் காதலிப்பெண் உமையே! எ அ

—தாயுமான சுவாமிகள்.

உமா நாதன் திருவருள் பெருக.

பத்தி நெறி

உல்லாசச் செந்தமிழைப் பாடவேண்டும்
உண்மையினில் வழுவாமல் ஒழுகவேண்டும்
கல்லாதார் உறவைவிட்டு நீங்கவேண்டும்
கற்றுணர்ந்தார் சபையினிற் போய்க்காக்கவேண்டும்
பொல்லாத குணத்தையெல்லாம் தவிர்க்கவேண்டும்
புண்ணியரை எந்நாளும் புகழ வேண்டும்
கொல்லாத விரதமதைப் பிடிக்க வேண்டும்
குமரகுருபரனருளிற் கூடலாமே.

-வண்ணச் சரபம் தண்டபாணி சுவாமிகள்

சௌத் இந்தியா பிரஸ், காரைக்குடி.